தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### கண்ணமநாயக்கனூரில் தென்னை விவசாயிகளுக்குப் பயிற்சி

**உடுமலை,**

தென்னை விவசாயிகளுக்கான 6 நாள் பயிற்சி முகாம் உடுமலையை அடுத்துள்ள கண்ணமநாயக்கனூரில் வெள்ளிக்கிழமை துவங்கியது. தென்னை வளர்ச்சி வாரியம், மடத்துக்குளம் தென்னை உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு சார்பில் நடைபெறும் இப் பயிற்சி முகாம் கடந்த 21-ஆம் துவங்கியது. இதில், மடத்துக்குளம் எம்எல்ஏ சி.சண்முகவேலு சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பயிற்சி முகாமைத் துவக்கி வைத்தார். நிர்வாகிகள் டி.ஜெயமணி, ஜெ.பெரியநாயகம் ஆகியோர் பேசினர். இம் முகாமில், நவீனக் கருவிகள் மூலமாகத் தென்னை மரம் ஏறும் பயிற்சி, தென்னையைத் தாக்கும் பூச்சிகள், நோய் கட்டுப்பாடு முறைகள், தொழில்நுட்பம், காப்புத்திறனை அதிகப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுகிறது. மேலும், தென்னை வளர்ச்சி வாரியம் மூலமாக வழங்கப்படும் மானியங்கள் குறித்தும் விளக்கம் அளிக்கப்படுகிறது. இதில் பங்கேற்கும் விவசாயிகளுக்கு ரூ.3,500 மதிப்புள்ள தென்னை மரம் ஏறும் கருவியும், ரூ.1 லட்சத்திற்கான பொதுக் காப்பீடு சான்றிதழும் வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு 97883-25305 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இம் முகாம் வரும் 26-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

### கறிக்கோழி பண்ணை கொள்முதல் விலை ரூ.58

**பல்லடம்,**

திருப்பூர் மாவட்டம், பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி. (பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது. சனிக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.58 ஆக இருந்தது. விற்பனையில் மாற்றம் எதுவும் இல்லாததால் ஞாயிற்றுக்கிழமையும் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**முருங்கைக் காய் விலை வரலாறு காணாத வீழ்ச்சி**

**வெள்ளக்கோவில்,**

வெள்ளக்கோவிலில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வாரச் சந்தையில் முருங்கைக் காய்களின் விலை வரலாறு காணாத வீழ்ச்சியடைந்தது. கிலோ மூன்று ரூபாய்க்கு விற்பனையானதால், விவசாயிகளின் பாடு திண்டாட்டமானது. பறிப்புக் கூலி, கொண்டு வர ஆன செலவுக்குக் கூட கட்டுப்படியாகாமல் வண்டி வாடகைக்கு கடன் வாங்கும் சூழ்நிலை நேரிட்டது. சுற்று வட்டாரக் கிராமங்களான வள்ளியிரச்சல், ஓலப்பாளையம், புதுப்பை பகுதிகளில் கிணற்றுப் பாசனத்தை நம்பிய ஏராளமான விவசாய நிலங்களில் முருங்கை பயிரிடப்பட்டுள்ளது. மூலனூர் பகுதியிலும் முருங்கை விவசாயம் பிரதானமாக உள்ளது. தற்போது, விவசாயத்துக்குப் போதுமான தண்ணீர் இல்லாத நிலையிலும், சில மாதங்களுக்கு முன் பெய்த மழை காரணமாக முருங்கை செழித்து வளர்ந்து உற்பத்தி கூடியுள்ளது. இவற்றை விற்பனை செய்ய உள்ளூர் வாரச் சந்தைகளையே நாட வேண்டியுள்ளது.

இந் நிலையில், கடந்த 4 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு தற்போது கிலோ மூன்று ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து, வடுகபாளையம் விவசாயி புதுவலசார் ஈ.லோகநாதன் கூறியதாவது:

விளை பொருள்கள் சந்தைக்கு வரும்போது, போதுமான விலை கிடைப்பதில்லை. தொடர் நஷ்டத்தால் விவசாயம் குறைந்து வருகிறது. இப்பகுதியில் முருங்கை பவுடர் தொழிற்சாலை அமைத்தால் நல்ல விலை கிடைப்பதுடன், வேலைவாய்ப்பும் பெருகும். இத்தேர்தல் நேரத்திலாவது போட்டியிடும் வேட்பாளர்கள் இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றார்.

**வாழை இலை விலை உயர்வால் விற்பனை மந்தம்**

**பல்லடம்,**

பல்லடத்தில் வாழை இலை விலை உயர்வால் விற்பனை மந்தம் அடைந்துள்ளது. பல்லடம் பகுதிக்கு கோவை, தூத்துக்குடி, தஞ்சை, திருச்சி, கும்பகோணம் பகுதியிலிருந்து வாழை இலைகள் கொண்டு வரப்படுகின்றன. கடும் வறட்சி காரணமாக சந்தைக்கு இலை வரத்து குறைந்து கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ரூ.300-க்கு விற்ற 100 இலைகள் கொண்ட ஒரு கட்டு தூத்துக்குடி

இலை, தற்போது ரூ.1,200-க்கும், ரூ.150-க்கு விற்ற கோவை இலை ரூ.750-க்கும், ரூ.200-க்கு விற்ற வத்தலகுண்டு இலை ரூ.600-க்கும் விற்பனையாகிறது. வாழை இலை விலை உயர்வால் பல்லடத்தில் உள்ள பல ஓட்டல்களில் பார்சல் சாப்பாடு மற்றும் டிபனுக்கு வாழை இலைக்குப் பதிலாக பிளாஸ்டிக் சீட்களைப் பயன்படுத்துகின்றனர்.

கோவில் விழாக்களில் இலை போட்டு அன்னதானம் வழங்குவது குறைந்து கொண்டுள்ளது. பாக்கு மட்டை தட்டுகளில் அன்னதானம் வழங்குவது அதிகரித்து வருகிறது. விசைத்தறி வேலைநிறுத்தம் காரணமாக பல்லடம் பகுதியில் பெரும்பாலான ஓட்டல்களில் உணவு விற்பனை குறைந்து வியாபாரம் பாதிப்படைந்துள்ளது என்று, வாழை இலை வியாபாரி குளித்தலை கதிர்வேல் தெரிவித்தார்.

## கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி

**கடலூர்,**

கடலூர் அருகே பல்லவராயநத்தம் ஊராட்சியில் கோமாரி தடுப்பூசி விழிப்புணர்வு முகாம் அண்மையில் நடைபெற்றது.

கால்நடை வளர்க்கும் பெண்கள் கிராமத்தின் அனைத்துத் தெருக்களிலும் ஊர்வலமாகச் சென்று முகாமிற்கு கால்நடைகளை அழைத்து வந்து கோமாரி தடுப்பூசி போட்டுச் செல்லுமாறு விழிப்புணர்வு பிரசாரம் செய்தனர். இதையடுத்து 500-க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு ஊராட்சித் தலைவர் ஆனந்தன் தலைமை வகித்தார். கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் மதிவாணன் முகாமை தொடங்கி வைத்தார். கால்நடைத் துறை வல்லுநர் பொன்னம்பலம், உதவி இயக்குநர் கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கால்நடை மருத்துவர்கள் மகாலட்சுமி மற்றும் ஆய்வாளர் ராஜமச்சேந்திரசோழன், பராமரிப்பு உதவியாளர் சாந்தி ஆகியோர் தடுப்பூசிகள் போட்டனர். தடுப்பூசி போடப்பட்ட கால்நடைகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## ரூ.30 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனை

**ஆத்தூர்:** ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்தில், 700 மூட்டை மஞ்சள், 30 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்துக்கு, 100 விவசாயிகள், தங்கள் விளைவித்த, 700 மூட்டை மஞ்சளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதில், விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 4,669 ரூபாய், அதிகபட்சம், 8, 509 ரூபாய், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 4,069 ரூபாய், அதிகபட்சம், 7,299 ரூபாய், பனங்காலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 9,091 ரூபாய், அதிகபட்சம், 13 ஆயரத்து, 899 ரூபாய்க்கு விற்பனையானது. ஏலத்தில், 10 வியாபாரிகள் கலந்து கொண்டு, 700 மூட்டை மஞ்சளை, 30 லட்சம் ரூபாய்க்கு வாங்கிச் சென்றனர்.

## ரூ.42 லட்சம் மதிப்பிலான கொப்பரை தேங்காய் ஏலம்

**பெருந்துறை:** பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நடந்த ஏலத்தில், 42 லட்சம் ரூபாய் மதிப்பிலான கொப்பரை ஏலம் போனது. இங்கு வாரம் தோறும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் கொப்பரை ஏலம் நடக்கிறது. சனிக்கிழமை நடந்த ஏலத்துக்கு, விவசாயிகள், 1,052 மூட்டைகளில், 50 ஆயிரம் கிலோ கொப்பரையை கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தர கொப்பரை குறைந்த பட்ச விலையாக, கிலோ, 87.55 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 88.75 ரூபாய்க்கும் விற்பனையானது. இரண்டாம் தர கொப்பரை

குறைந்தபட்ச விலையாக, கிலோ, 61.15 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 85.65 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, 42 லட்சம் ரூபாய்க்கு ஏலம் மூலமாக விற்பனையானது.

## மருத்து குணமுள்ள கோவக்காய் ஈரோட்டில் விற்பனை ஜோர்

**ஈரோடு:** ஈரோடு நேதாஜி காய்கறி மார்க்கெட்டில், மருத்துவ குணமுள்ள கோவக்காய் விற்பனை களைகட்டுகிறது. ஈரோடு நேதாஜி காய்கறி மார்க்கெட்டில், 736 கடைகள் உள்ளன. இங்குள்ள கடைகளுக்கு, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து, பலவிதமான காய்கறிகள் விற்பனைக்காக வருகின்றன. காய்கறி மார்க்கெட்டு மருத்துவ குணமுள்ள காய்கறிகளும், அதிகளவில் வருகின்றன. ஒட்டன்சத்திரம் பகுதியில் இருந்து, கோவக்காய் அதிகளவில் மார்க்கெட்டு விற்பனைக் காக வருகின்றன. ஒட்டன்சத்திரம் வியாபாரி கார்த்திக் கூறியதாவது:

மருத்துவ குணமுள்ள காய்களில், கோவக்காயும் ஒன்று. தமிழகத்தில் கம்பம், கடலூர், ஒட்டன்சத்திரம் பகுதியில் இருந்து கோவக்காய் விற்பனைக்காக மொத்தமாக வாங்கி வருகிறோம். வாய்ப்புண், அல்சர், சர்க்கரை நோய், மாதவிடாய் கோளாறு, நரம்பு தளர்ச்சி உள்ளிட்ட பிரச்னைகளுக்கு, இது கண்கண்ட மருந்தாகும். தவிர, டெக்கு காய்ச்சலில், பாதித்த நோயாளியின், ரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்கள் உற்பத்தியை அதிகரித்தது. கோவக்காய் கிலோ, 40 ரூபாய் வரை விலை போகிறது, என்றார்.

## மார்க்கெட்டில் மீன் விற்பனை அமர்க்களம்

**திருப்பூர்** : கடும் வெயில் காரணமாக, இறைச்சியை விடுத்து, அசைவ பிரியர்கள், மீன் உணவுக்கு தாவியுள்ளதால், திருப்பூரில் மீன் விற்பனை அதிகரித்துள்ளது.கோடை காலம் துவங்கியுள்ளதையடுத்து, திருப்பூரில் வெயில் தாக்கம் அதிகரித்து வருகிறது. சூட்டை தணிக்க, இளநீர், பதனீர் போன்ற குளிர்பானங்களை தேடும் மக்கள், அசைவ உணவுகளிலும் கட்டுப்பாட்டை கடைபிடிக்க துவங்கியுள்ளனர். கோழி, ஆட்டிறைச்சியை விட, மீன், எல்லா

காலத்துக்கும் பொதுவானது. கோடை வெயிலால், திருப்பூர் பகுதி மக்கள், மீன் வாங்க அதிக ஆர்வம் காட்டத் துவங்கியுள்ளனர்.தென்னம்பாளையத்தில் உள்ள மீன் மார்க்கெட், மொத்த விற்பனை மையமாக உள்ளது. கேரளா, கன்னியாகுமரி, ராமேஸ்வரம், தூத்துக்குடி, கர்நாடகா பகுதிகளில் இருந்து, மீன் கொண்டு வரப்படுகிறது. கோவில் விஷேசங்களால், கடந்த இரு வாரமாக, திருப்பூரில் மீன் விற்பனை குறைந்திருந்தது.விசேஷங்கள் நிறைவடைந்து, வெயில் தாக்கம் அதிகரித்துள்ளதால், மீன் விற்பனை அதிகரிக்கத் துவங்கியுள்ளது. மார்க்கெட்டுக்கு, நாளொன்றுக்கு 40 டன்னாக இருந்த மீன் வரத்து, 60 டன்னாக உயர்ந்துள்ளது. இங்கு கொள்முதல் செய்யும் சிறு வியாபாரிகள், பல்லடம் ரோடு, அவிநாசி ரோடு, தாராபுரம் ரோடு போன்ற நகரின் முக்கிய பகுதிகளில், தார்பாய்களால் தற்காலிக கடை அமைத்தும், கூடைகளில் வைத்தும், மீன் விற்பனை செய்கின்றனர்.தேவை அதிகரித்துள்ளதால், சில்லரை வர்த்தகத்தில் விலையும் உயரத்துவங்கியுள்ளது. மத்தி கிலோ 65; வஞ்சிரம் 610; வாவல் (கருப்பு) 450, வெள்ளை 650; பாறை 320; ஊழி 250; சீலா 300; நண்டு 250; அயிலை 160 என கடல் மீன்களும், கட்லா 140; ரோகு 120; மிர்கால் 110 ரூபாய்க்கு ஆற்றுமீன்களும் விற்கப்பட்டன.

## வெற்றிலை கொள்முதல் செய்ய வியாபாரிகள் தயக்கம்; தேவை குறைவால் விலை சரிவு

**தேவதானப்பட்டி** : வெற்றிலை தேவை குறைந்து வருவதால் பெரியகுளம் தாலுகாவில், சாகுபடி செய்யப்பட்டுள்ள வெற்றிலையை, கொள்முதல் செய்ய வியாபாரிகள் முன் வரவில்லை.

இதனால் கூலித் தொழிலாளர்கள் வேலை இழந்து வருகின்றனர்.பெரியகுளம் தாலுகா, வடுகபட்டி, மேல்மங்கலம், ஜெயமங்கலம், சில்வார்பட்டி, கெங்குவார்பட்டி, ஜி.கல்லுப்பட்டி,பெரியகுளம், கீழவடகரை, தெய்வேந்திரபுரம் ஆகிய கிராமங்களில் 500 ஏக்கர் பரப்பளவில் வெற்றிலை சாகுபடி செய்யப்படுகிறது.

பணப்பயிராக கருதப்படும் வெற்றிலை, ஆண்டுதோறும் ஆகஸ்ட், செப்., மாதத்தில் அகத்தி விதைவிதைப்பு பணி நடைபெறும். 60 நாட்கள் கழித்து அக்., நவம்பரில் வெற்றிலைக் கொடி நடவு செய்யப்படும்.

இதற்காக சோழவந்தான், சின்னமனூர், பரவை, தேனூர் ஆகிய கிராமங்களில் இருந்து,கொடி விலைக்கு வாங்கி வரப்படும். கொடி நடவு செய்து,ஆறு மாதங்கள் கழித்து ஜன, பிப்., மாதங்களில் பலன் கிடைக்கும்.

நோய் தாக்குதல் இல்லை என்றால், தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு அதன் பலனை அனுபவிக்க முடியும். ஒரு ஏக்கர் பரப்பளவில் விளைச்சல் எடுக்க 4 லட்சம் ரூபாய் வரை செலவாகிறது. கடந்த சில ஆண்டுகளாக, இலை சுருட்டை, வேர்புழு போன்ற நோய் தாக்குததால், வெற்றிலை சாகுபடி அழிந்து வருகிறது.

தற்போது கடும் வறட்சி நிலவி வருகிறது.கிணறுகளில் தண்ணீர் வற்றிவிட்டது. இதனால் பயிர்களை காப்பதில் விவசாயிகள், மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். இப்பகுதியில் சாகுபடி செய்யப்படும் வெற்றிலை ராஜபாளையம், கோயில்பட்டி, கொடைக்கானல், திண்டுக்கல், பழனி, மதுரை, சென்னை உட்பட தமிழகத்தின் அனைத்து பகுதிகளுக்கும் அனுப்பப்படுகிறது.விலை வீழ்ச்சி: கடந்த காலங்களில் வெள்ளை வெற்றிலை கிலோ 90 ரூபாய், கருப்பு வெற்றிலை கிலோ 60 ரூபாய்க்கும் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டது.

மேலும், கூலியாள் சம்பளம், போக்குவரத்து செலவு கிலோவிற்கு 50 ரூபாய் வரும் செலவினங்கள் சேர்த்து, வெள்ளை 140, கருப்பு 110 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

தற்போது விவசாயிகளிடம், கருப்பு வெற்றிலை 40 ரூபாய், வெள்ளை வெற்றிலை 60 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது.கொள்முதல் தேக்கம்: தற்போது திருணம், காதுகுத்து போன்ற விழாக்கள் குறைவாக உள்ளது. மேலும், சில ஆண்டுகளாக வெற்றிலை பயன்படுத்துவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.

இதனால், வெற்றிலையின் தேவை குறைந்துள்ளது. வியாபாரிகள் வெற்றிலையை கொள்முதல் செய்ய, தயக்கம் காட்டி வருகின்றனர். 30 முதல் 40 நாட்களுக்குள், மாதம் தோறும் வெற்றிலையை பறிக்க வேண்டும்.

ஆனால், சில மாதங்களாக வெற்றிலையை பறிக்க வேண்டிய நாட்கள் 50 முதல் 60 நாட்கள் கடந்தும்,வெற்றிலை கொடியில் தொங்குகிறது. வெற்றிலை முற்றி பயன்படுத்த லாயக்கற்றதாக மாறி வருகிறது.இதனால்,விவசாயிகள் கவலையில் உள்ளனர்.வெற்றிலை சாகுபடி விவசாயிகள் கூறியது: பெரியகுளம் தாலுகாவில் பத்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள், இத்தொழிலை நம்பி குடும்பம் நடத்தி வருகின்றனர்.

கொள்முதல் செய்ய வியாபாரிகள் முன்வரவில்லை. விலையும் வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால்,அதிகமான பொருளாதார இழப்பு ஏற்பட்டு, தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழந்து வருகின்றனர். இவ்வாறு கூறினர்.

## கால்நடை மலட்டுத்தன்மை நீக்க சிறப்பு சிகிச்சை முகாம்

**நாகர்கோவில்** : குமரி மாவட்டத்தில் கால்நடை வளர்ப்போர் பெரும்பாலும் ஜெர்சி மற்றும் ப்ரீசியன் இனகலப்பு பசுக்களையே வளர்க்கின்றனர்.

இவை அதிக அளவு பால் உற்பத்தி தன்மை கொண்டவை. பால் உற்பத்தி அதிகம் இருந்தாலும், போதுமான வைட்டமின்கள் மற்றும் தாது உப்புகள் கிடைக்காவிட்டால் அவைகளுக்கு சினை பிடிப்புத்தன்மை குறையும் வாய்ப்புள்ளது.

சினை பிடிப்புத் தன்மையை மேம்படுத்தும் வகையில் மணவாளக்குறிச்சி கால்நடை மருந்தக பகுதியான அழகன்பாறை கிராமத்தில் கால்நடை மலட்டுத்தன்மை நீக்க சிறப்பு சிகிச்சை முகாம் நடைபெற்றது.

முகாமை நாகர்கோவிலில் கால்நடைபெருக்கம் மற்றும் தீவின அபிவிருத்தி திட்ட துணை இயக்குனர் நசீர் முன்னிலையில் கன்னியாகுமரி மாவட்ட கால்நடை பராமரிப்பு மண்டல இணை இயக்குனர் உமாமகேஸ்வரி தொடங்கி வைத்தார்.

உதவி மருத்துவர் பரமேஸ்வரன் தலைமையில் டாக்டர் அனிஷ் மற்றும் பணியாளர்கள் அடங்கிய குழுவினர் சிறப்பு சிகிச்சை அளித்தனர்.

முகாமில் 11 பசுக்களுக்கு கருவூட்டல் பணியும், 23 பசுக்களுக்கு சினைப்பரிசோதனையும் செய்யப்பட்டது.

15 பசுக்களுக்கு கருப்பை கோளாறுகள் சிறப்பு பரிசோதனைகள் மூலம் கண்டறியப்பட்டு, சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு சினைபிடிக்கும் தன்மை ஊக்குவிக்கப்பட்டது.

## ரூ.41.62 லட்சத்தில் கால்நடை மருந்தகம் விவசாயி மகிழ்ச்சி

**சேந்தமங்கலம்**: சேந்தமங்கலம் அடுத்த புதுச்சத்திரம் யூனியன் திருமலைப்பட்டி, பொம்மைக்குட்டைமேடு ஆகிய பகுதிகளில், கால்நடை மருந்தகம் வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் கோரிக்கை.

இது தொடர்பாக தொகுதி எம்.எல்.ஏ., பாஸ்கரிடம் மனு அளிக்கப்பட்டது. அவரும், மக்களின் தேவையை கருத்தில் கொண்டு, கால்நடை மருந்தகம் அமைக்க, தொழில் துறை அமைச்சர் தங்கமணியிடம் வலியுறுத்தினார்.

அதைதொடர்ந்து, 41.62 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. நிதி ஒதுக்கீட்டை தொடர்ந்து, கடந்த ஆண்டு கட்டுமானப்பணிகள் துவங்கப்பட்டது. பணிகள் அனைத்தும் முடிவடைந்ததை தொடர்ந்து, மக்கள் பயன்பாட்டுக்காக கால்நடை மருந்தகம் திறக்கப்பட்டுள்ளது.

தற்போது, சுற்று வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள், இந்த கால்நடை மருந்தகம் மூலம் தங்கள் கால்நடைகளுக்கு தேவையான சிகிச்சையும், ஆலோசனையும் பெற்று வருகின்றனர்.

## வெள்ளரி செடி பயிரிட்ட விவசாயிகள் : அதிக விலை கிடைப்பதால் மகிழ்ச்சி

**கள்ளக்குறிச்சி**: கள்ளக்குறிச்சி பகுதியில் கோடைக்கு இதமான வெள்ளரி செடி பயிரிட்டுள்ள விவசாயிகள் அதிக லாபம் கிடைப்பதால் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கள்ளக்குறிச்சி அடுத்த எரவார் பகுதியில் வெள்ளரி செடிகளை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.

மூன்று மாத பயிரான வெள்ளரி செடிகள் 45 நாட்களில் காய்க்க துவங்குகின்றன. ஈரப் பதம் குறையாமல், குறைந்த நீரில் வளரும் தன்மை உள்ளதால், பூ விட்டவுடன் ஒரு முறை மருந்து தெளிக்கின்றனர்.

காய்க்கத் துவங்கியதும் மருந்து தெளித்து தொற்று ஏற்படாமல் பராமரிக்கின்றனர். தொடர்ந்து 45 நாட்களுக்கும் தினம் 700 முதல் 800 காய்கள் வரை மகசூல் கிடைக்கிறது.

குறைந்த காலத்தில் அதிக லாபம் தரக்கூடிய இந்த வெள்ளரியை குறைந்தளவு விவசாயிகள் மட்டுமே பயிரிட்டுள்ளனர்.

இந்த கோடை சீசனில் ஒரு காய் 7 முதல் 8 ரூபாய் வரை விலை போவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வெளிமாவட்ட வியாபாரிகள் போட்டா போட்டி

### பொள்ளாச்சி இளநீருக்கு கிராக்கி: கொள்முதல் விலை அதிகரிப்பு



**பொள்ளாச்சி**: கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் விளையும் பச்சைநிற இளநீர் மற்றும் செவ்விளநீருக்கு மக்களிடம் நல்ல வரவேற்பு உள்ளது. இங்கிருந்து வெளிமாநிலங்களுக்கும் அதிகளவில் இளநீர் அனுப்பப்படுகிறது. கடந்த சில வருடங்களாக பொள்ளாச்சி சுற்றுவட்டாரத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கும், வெளி மாநிலங்களுக்கும் இளநீர் குறிப்பிட்ட விலை நிர்ணயம் செய்து அனுப்பப்படுகிறது. தற்போது தேவை அதிகம் உள்ளதால், செவ்விளநீருக்கு அதிக விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இளநீரின் விலை ஏற்றமாக இருந்தாலும், வெளியூர் வியாபாரிகள் பொள்ளாச்சிக்கு நேரடியாக வந்து போட்டி போட்டு கொள்முதல் செய்கின்றனர்.

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் சுமார் 25 லட்சம் செவ்விளநீர், 20 லட்சம் பச்சைநிற இளநீர் வெளிமாவட்டங்களுக்கு னுப்பப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். இதில், செவ்விளநீர் கர்நாடகா, ஆந்திரா மற்றும் வட மாநிலங்களுக்கு அதிக அளவில் அனுப்பப்படுகிறது. சென்னை, மதுரை, திண்டுக்கல், விழுப்புரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும் அனுப்பப் படுகிறது. இதுகுறித்து வியாபாரி ஒருவர் கூறுகையில், 'தோப்புக்கு நாங்கள் நேரடியாக வந்து ஒரு இளநீர் ரூ.15 முதல் 16 வரை கொள்முதல் செய்கிறோம்.

இது தவிர ஏற்று, இறக்க கூலியையும் கணக்கில் கொண்டு விற்பனை விலை நிர்ணயிக்க வேண்டியுள்ளது. எப்போதும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு தேவை அதிகரித்துள்ளது' என்றார்.

**பூக்கள் விலை கடும் சரிவு: மல்லிகை ரூ.70க்கு விற்பனை**



**நாகர்கோவில்**: தோவாளை பூ மார்க்கெட்டுக்கு குமரி மாவட்டம் மட்டுமின்றி பல்வேறு பகுதியில் இருந்தும் பூக்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. இது தவிர இங்கிருந்து கேரளா உள்பட தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. திருமணம் மற்றும் விஷேச நாட்கள் தற்போது குறைவு என்பதால் பூ விலையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. நேற்று காலை ஒரு கிலோ மல்லிகை பூ ரூ.70க்கு விற்பனை செய்யப்பட்டது. நாகர்கோவில் பகுதியில் ஒரு கிலோ ரூ.100க்கு விற்பனையானது. சீசன் காலங்களில் ஒரு கிலோ மல்லிகை பூ ரூ.1,000 வரை விற்பனை செய்யப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. இதனை போன்று பிச்சிப்பூவும் கிலோ ரூ.200க்கு விற்பனையானது. வாடாமல்லி கிலோ ரூ.30க்கும், அரளி ரூ.50, கிரேந்தி ரூ.25, ரோஜா ரூ.80, சம்பங்கி ரூ.25, தாமரை ஒன்று 50 காசுக்கும் விற்பனை செய்யப்பட்டது.

**கால நிலை மாற்றத்தால் உணவு பற்றாக்குறை அபாயம்**



**ஐதராபாத்:** உலகம் முழுவதும் மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டு வரும் அழிவுகள், கால நிலை மாற்றம், உலக வெப்பமயமாதல் உள்ளிட்ட காரணங்களால் எதிர்காலத்தில் உணவு பற்றாக்குறை ஏற்படும் என்று அறிவியல் மையத்தின் விஞ்ஞானி என்.எச்.ரவீந்திரநாத் எச்சரித்துள்ளார். ஐதராபாத் பல்கலைக் கழகத்தில் கால நிலை மாற்றம் குறித்த கருத்தரங்கம் வெள்ளிக்கிழமை நடந்தது. இதில் அவர் மேலும் பேசுகையில், 'இயற்கை வளத்தை பாதுகாக்க வேண்டும். இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவில்லை என்றால் பெரும் ஆபத்தை சந்திக்க நேரிடும்' என்றார்.

**பாமாயில் அறுவடை பயிற்சி**

**சங்கராபுரம்,** : சங்கராபுரம் அருகே கடுவனூர் கிராமத்தில் பாமாயில் பழக்குலைகளை அறுவடை செய்யும் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. தென்மண்டல அதிகாரி ராஜா தலைக்கவசம், காலுரை, கையுரை மற்றும் சீருடையை விவசாயிகளுக்கு வழங்கினார். பாமாயில் வளர்ச்சி அலுவலர் சதீஷ்மண்ணன் பயிற்சி முறைகள் குறித்து கூறியதாவது:

2007ம் ஆண்டு முதல் 2010ம் ஆண்டு வரை ஐசோபாம் எண்ணெய் பணித்திட்டத்தின் மூலம் நடவு செய்யப்பட்ட பாமாயில் மரங்களில் இருந்து பழக்குலைகள் அறுவடை செய்யப்பட்டு அரியலூர் வாரணவாசி எண்ணெய் பிழியும் ஆலைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மாதந்தோறும் மூன்று அறுவடைகள் செய்வதாலும் பழக்குலைகளின் முதிர்ச்சியை அறிந்து அதிக மகசூல்

பெறுவதற்காகவும் அறுவடை பயிற்சி அவசியமாகிறது. பரிந்துரைக்கப்பட்ட உரங்களையிட்டு நன்றாக பராமரிக்கப்பட்ட பாமாயில் ஏக்கருக்கு 12 முதல் 15 மெட்ரிக் டன் பழக்குலைகளை ஆண்டு ஒன்றுக்கு அறுவடை செய்யலாம். 3 முதல் 30 ஆண்டு வரை அறுவடை செய்யலாம். மாதம் 3 முறை அறுவடை செய்வதால் வேலையாட்கள் தேவை மிகக்குறைவு. பயிற்சியானது பாமாயில் பயிரிடுவோர் எண்ணிக்கையை அதிகரித்து உற்பத்தியை பெருக்குவதற்காக வழங்கப்படுகிறது. இதில் கள அலுவலர் ராஜேஷ், விவசாயிகள் மற்றும் அறுவடை தொழிளாலர்கள் கலந்துகொண்டனர்.

## மாவட்டம் முழுவதும் 21நாளில் 3.67 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி

**ஈரோடு,** : ஈரோடு மாவட்டத்தில் கடந்த 21 நாட்களில் 3.67 லட்சம் கால்நடைகளுக்கு கோ மாரிநோய் தடுப்பூசி போ டப்பட்டுள்ளது. தொட ர்ந்து மாடுகளை கண்காணிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்குதல் அதிகரித்து வந்தது. இந்த நோயின் தாக்கம் அதிகரித்ததால் ஏராளமான மாடுகள் இறந்து போனது. இதையடுத்து கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கிராமங்கள்தோறும் கால்நடை துறையினர் ஆய்வு மேற்கொண்டனர். கால்நடைகளுக்கு ஆண் டுக்கு இருமுறை கோமாரிநோய் தடுப்பூசி போடப்பட்ட நிலையிலும் திடீரென ஏற்பட்ட இந்த பாதிப் பால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

கோமாரிநோயினால் இறந்து போன கால்நடைகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்று விவசாயிகள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகிறார்கள். இந்நிலையில் மாவட்டத்தில் வேகமாக பரவிய கோமா ரிநோயை கட்டுப்படுத்தும் வகையில் அனை த்து பகுதிகளிலும் முதல்கட்டமாக கோமாரிநோய் தடுப்பு முகாம் நடைபெற்றது.

இதில் விவசாயிகள் தங்களது கால்நடைகளை அழைத்து வந்து கோமாரிநோய் தடுப்பூசி போட்டுக் கொண்டனர். மேலும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அனைத்து பகுதிகளிலும் கால்நடை மருத்துவர்கள் நேரடியாக சென்று களஆய்வு

நடத்தி கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

அதன்படி கடந்த 1ம்தேதி முதல் 21ம்தேதி வரை மாவட்டம் முழுவதும் கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போடும் பணி நடந்தது. இதற்காக ஒரு குழுவிற்கு ஒரு கால்நடை மருத்துவர், ஒரு உதவியாளர் என 132 குழுக்கள் அமைக்கப்பட்டு தடுப்பூசி போடும் பணிகள் நடந்தது.

அதன்படி கடந்த 21 நாட்களில் 3 லட்சத்து 67 ஆயிரத்து 50 கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. தொடர்ந்து மாடுகளை கண்காணிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்ப ட்டு வருகிறது.

இதுகுறித்து கால்நடை பராமரி ப்புத்துறை அதிகாரிகள் கூறுகையில், ஈரோடு மாவட்டத்தில் உள்ள 14 ஊராட்சி ஒன்றியங்களிலும் 102 கால்நடை மருத்துவமனைகள் செயல்பட்டு வருகிறது. இந்த மருத்துவமனைகள் மூலமாக கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களை தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு மாவட்டத்தில் கால்நடைகளுக்கு வேகமாக கோமாரிநோய் பரவியது. இதையடுத்து கோமாரிநோயை கட்டுப்படுத்த உடனடியாக சம்பந்தப்பட்ட கால்நடை மருத்துவர்கள் குழுவினர் கிராமப்புறங்களுக்கு சென்று கோமாரி நோய் தடுப்பூசி போட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும் 21 நாட்களுக்கு சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 3 லட்சத்து 66 ஆயிரத்து 290 கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

இதுதொடர்பாக நாங்கள் குழு அமைத்து ஒவ்வொரு பகுதியாக சென்று கால்நடைகளை கண்டறிந்து கோமாரிநோய் தடுப்பூசி போட்டுள்ளோம். இந்த 21 நாட்களில் 3 லட்சத்து 67 ஆயிரத்து 50 கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போட்டுள்ளோம்.

மேலும் வெளி மாநிலங்களில் இருந்து யாராவது மாடுகள் வாங்கி வந்தால் உடனடியாக சம்பந்தப்பட்ட பகுதியில் உள்ள கால்நடை மருத்துவமனையை அணுகி கோமாரிநோய் தடுப்பூசி போட வேண்டும் என்று அறிவுறுத்தி வருகிறோம்.

இன்னும் 6 மாதம் கழித்து மீண்டும் கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது மாவட்டம் முழுவதும் கால்நடைகளுக்கு ஏற்பட்ட கோமாரிநோய் முற்றிலும் தடுக்கப்பட்டுள்ளது என்றனர்.

**கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி**

**பூம்புகார்,** : பூம்புகார் அருகே ராதாநல்லூர் ஊராட்சியில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடந்தது.

ஊராட்சி தலைவர் சரஸ்வதி தலைமை வகித்தார். ஊராட்சி துணைத்தலைவர் ரமேஷ் முன்னிலை வகித் தார்.

முகாமில் கால்நடை உதவி மருத்துவர்கள் கவிதா, சரவணன் தலைமை வகித்தனர். கால்நடை பயிற்சி ஆய்வாளர்கள் ஓசூர் ஜெயா, ஹாஜரா, கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் தியாகராஜன், கார்த்திகேசன் ஆகியோர் கொண்ட மருத்துவ குழுவினர் 500க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டனர்.

ஊராட்சி செயலர் எம்பாவை கண்ணன் நன்றி கூறினார். இதில் ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண் டனர். தரங்கம்பாடி: பொறையார் பகுதியில் 21 ஊராட்சிகளில் 10,500 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

கால்நடை மருத்துவர்கள் டாக்டர் முத்துகுமரசாமி, டாக்டர் ராஜேந்திரன், கால்நடை ஆய்வாளர் கார்த்திகாதேவி, பாலமுருகன், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் மாதவன், பாலசுப்பிரமணியன் கொண்ட குழுவினர் கடந்த 1ம் தேதியிலிருந்து கிடங்கல், திருக்கடையூர், திருக்களாச்சேரி, சங்கரன்பந்தல் உள்ளிட்ட 21 ஊராட்சிகளில் கோமாரி தடுப்பூசி போட்டனர்.

தினத் தந்தி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**40 ஆண்டு கால கட்டுப்பாடு நீங்கியது நேரடியாக வெங்காயம் ஏற்றுமதி செய்ய அனுமதி**



**புனா,**

நாற்பது ஆண்டு காலமாக இருந்து வந்த கட்டுப்பாடு நீங்கியது. இனி யார் வேண்டுமானாலும் வெங்காயத்தை நேரடியாக ஏற்றுமதி செய்யலாம்.

<u>விதிமுறை</u>

கடந்த 1974–ஆம் ஆண்டில் குறிப்பிட்ட ஏஜென்சிகள் வாயிலாக மட்டுமே வெங்காயம் ஏற்றுமதி செய்ய வேண்டும் என்ற விதிமுறையை மத்திய அரசு கொண்டு வந்தது. ஏற்றுமதியாளர்கள் வெங்காயம் ஏற்றுமதி செய்ய இவ்வமைப்புகளிடம் தடையில்லா சான்றிதழ் பெற வேண்டும். இதற்காக ஏற்றுமதியில் 1 சதவீதத்தை கட்டணமாக செலுத்தி வந்தனர். விவசாயிகள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் இந்த விதிமுறையை தளர்த்துமாறு வலியுறுத்தி வந்தனர். இதனையடுத்து கடந்த வாரம் வெளிநாட்டு வர்த்தக பொது இயக்குனரகம் வெங்காயம் ஏற்றுமதிக்கான விதிமுறைகளை தளர்த்தபட்டதாக அறிவித்தது. இதன் காரணமாக வெங்காயம் ஏற்றுமதி அதிகரிக்கும். கடந்த ஆண்டில் எப்போதும் இல்லாத அளவிற்கு ஒரு கிலோ வெங்காயம் ரூ.100–ஆக உயர்ந்தது.

எனவே, உள்நாட்டில் சப்ளையை அதிகரிக்கும் வகையில் மத்திய அரசு வெங்காயம் ஏற்றுமதிக்கான குறைந்த பட்ச விலையை நிர்ணயித்தது. இந்நிலையில், வெங்காயம் உற்பத்தி வரலாறு காணாத அளவிற்கு அதிகரிக்கும் என்ற நிலைப்பாட்டால் மத்திய அரசு குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை நீக்கியது. ஏப்ரல் மாதத்தில் ரபி பருவ வெங்காயம் அறுவடை பணிகள் தொடங்கி சந்தைக்கு வெங்காயம் வரத்து அதிகரிக்கும். எனவே, உள்நாட்டில் வெங்காயம் விலை வீழ்ச்சியை தடுக்க ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டியது அவசியமாகும். இதன் காரணமாக விவசாயிகளின் நலன் பாதுகாக்கப்படும்.

எதிர்பாராத மழை

வட மாநிலங்களில் பெய்த எதிர்பாராத மழையால் வெங்காயம் பயிர்கள் சேதமடைந்துள்ள போதிலும் உற்பத்தியில் பெரிய அளவில் பாதிக்காது. ஏனென்றால் வெங்காயம் சாகுபடி பரப்பளவு இதுவரை இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளது.

**சேந்தமங்கலம் பகுதியில் மாங்கூழ் தொழிற்சாலை அமைக்க வேண்டும் விவசாயிகள் கோரிக்கை**



**சேந்தமங்கலம்,**

சேந்தமங்கலம் பகுதியில் மாங்கூழ் தொழிற்சாலை அமைக்க வேண்டும் என்று மா பயிரிட்டு உள்ள விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**விளைச்சல் குறைந்தது**

நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் பகுதியில் உள்ள முத்துகாப்பட்டி, பெரியசாமி கோவில், எருமப்பட்டி, பெரியபள்ளம்பாறை, சின்ன பள்ளம்பாறை, காளப்பநாயக்கன்பட்டி, மூணாவது மைல், நடுக்கோம்பை, காரவள்ளி ஆகிய பகுதிகளில் உள்ள சுமார் 4 ஆயிரம் ஏக்கரில் மா சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

இந்த பகுதிகளில் பங்கனப்பள்ளி, கிளிமூக்கு, இமாம்பசந்த், அல்போன்சா, செந்தூரா போன்ற வகை மாம்பழங்கள் அதிகளவில் இங்கு விளைந்து வருகிறது. கடந்த ஆண்டு போதிய மழை இல்லாத காரணத்தால் இந்த வருட விளைச்சல் கடந்த ஆண்டை காட்டிலும் 40 சதவீத அளவில் குறைந்து உள்ளது. இதனால் மா விவசாயிகள் ஏமாற்றம் அடைந்து உள்ளனர்.

**ஊறுகாய் தயாரிக்க...**

சேந்தமங்கலம் பகுதியில் ஒவ்வொரு வருடமும் மார்ச் மாத இறுதியில் இருந்து ஜூன் மாதம் முடிய 3 மாதங்களுக்கு இந்த மாசீசன் நடைபெற்று வரும். இந்த சீசனில் வெளி மாவட்ட மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து லாரிகளில் மாம்பழங்களை ஏற்றி இறக்கவும், மாந்தோப்புகளில் இருந்து மாங்காய்களை சந்தைப்பகுதிக்கு கொண்டு செல்லும் பணியில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த வருடம் தற்போது மா சீசன் தொடங்கி உள்ளது. ஒரு சில பகுதியில் மாம்பழங்கள் விளைந்துள்ளன. மற்ற பகுதிகளில் மாம்பிஞ்சுகள் விளைச்சல் அதிகரித்து உள்ளது. இதனை கும்பகோணம், திருச்சி, தஞ்சாவூர் மற்றும் சேலம் ஆகிய பகுதிகளுக்கு ஊறுகாய் தயாரிப்பதற்காக மினி லாரிகளில் மா லோடுகள் ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்படுகிறது.

**மாங்கூழ் தொழிற்சாலை**

இன்னும் சில வாரங்களில் மாம்பழங்கள் விளைச்சல் அதிகரிக்க தொடங்கும். அந்த பழங்கள் மும்பை, ஆந்திரா, கர்நாடகா, குஜராத் போன்ற வெளிமாநிலங்களுக்கு நுகர்வுக்காக அதிகளவில் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படும். இதற்கிடையில்

இவ்வாறு ஏற்றுமதி செய்யப்படும் மாம்பழங்களை பாதுகாக்க சேந்தமங்கலம் பகுதியில் குளிர்சாதன வசதி கொண்ட ஒரு மையம் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது.

இதேபோல மாவிளைச்சல் அதிகமாக உள்ள இப்பகுதியை கொண்டு மாங்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றும் அமைப்பதற்கும் அரசு சார்வில் விரைந்து ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் இப்பகுதியை சேர்ந்த மா விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**பரமத்திவேலூரில் பூக்கள் விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி**



**பரமத்திவேலூர்,**

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகாவில் உள்ள செங்கப்பள்ளி, எல்லை மேடு, கொளக்காட்டு புதூர், நெட்டையாம்பாளையம், அண்ணா நகர் மற்றும் கரூர் மாவட்டம் சேமங்கி, முத்தனூர், மூலிமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் அதிக அளவில் பூக்கள் பயிரிடப்பட்டு உள்ளது. இந்த பகுதிகளில் விளையும், சம்பங்கி, குண்டு மல்லி, அரளி, கோழிகொண்டை உள்ளிட்ட பூக்களை விவசாயிகள் பரமத்தி வேலூரில் நடைபெறும் தினசரி பூ ஏல மார்க்கெட்டிற்கு தினந்தோறும் கொண்டு வருகின்றனர். சென்ற வாரம் நடைபெற்ற ஏலத்தில் குண்டு மல்லி பூ கிலோ ஒன்று ரூ.100-க்கும், சம்பங்கி ரூ.120-க்கும், அரளி ரூ.70-க்கும், பைவ் ஸ்டார் ரோஸ் ரூ.120-க்கும், கோழிகொண்டை கட்டு ஒன்று ரூ.40-க்கும், விற்பனையானது. நேற்று காலையில் நடைபெற்ற ஏலத்தில் குண்டு மல்லி பூ கிலோ ஒன்று ரூ.200-

க்கும், சம்பங்கி ரூ.220-க்கும், அரளி ரூ.110-க்கும், பைவ் ஸ்டார் ரோஸ் ரூ.120-க்கும், கோழிகொண்டை கட்டு ஒன்று ரூ.60-க்கும் விற்பனையானது. இது குறித்து விவசாயிகள் கூறும்போது, உள்ளூர் பண்டிகை காரணமாக பூக்கள் விலை சற்று உயர்ந்து உள்ளது என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

**வாட்டி வதைக்கும் வெயில்: திருவாரூருக்கு தர்பூசணி வரத்து அதிகரிப்பு**



**திருவாரூர்,**

வாட்டி வதைக்கும் வெயில் காரணமாக திரு வாரூருக்கு தர்பூசணி பழங்களின் வரத்து நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது.

**<u>வெயில் தாக்கம்</u>**

திருவாரூரில் வழக்கத்துக்கு மாறாக கோடை கால மாதங் களான ஏப்ரல், மே மாதங் களுக்கு முன்னதாகவே வெயில் சுட்டெரிக்க தொடங்கி விட்டது. மே மாத அக்னி நட்சத்திர வெயிலைப் போல வாட்டி வதைக்கும் வெயிலால் பொதுமக்கள் சிரமம் அடைந்துள்ளனர். கொளுத்தும் வெயிலின் வெம்மையை தணிக்கும் வித மாக திருவாரூர் நகர் பகுதி களில் பழச்சாறு கடைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த கடைகளில் இளநீர், நொங்கு போன்றவற்றின் விற்பனை நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் கோடை வெயிலில் இருந்து தணிப் பதில் முக்கிய பங்கு வகிக்கும் தர்பூசணி பழங்களின் வரத்து அதிகரித்துள்ளது. திரு வாரூர் கமலாலய குளம் தென்கரை, விளமல் கல்பாலம், பஸ்

நிலையம் உள்ளிட்ட பகுதி களில் தர்பூசணி பழ கடைகள் புதிதாக தொடங்கப்பட்டுள் ளன. தர்பூசணி வரத்து அதிகரித் திருப்பது பற்றி வியாபாரிகள் கூறியதாவது:–

<u>வரத்து அதிகரிப்பு</u>

வழக்கத்தை விட வெயில் தாக்கம் அதிகரித்து விட்ட தால், திருவாரூருக்கு தர் பூசணி வருகையும் அதிகரிக்க தொடங்கி உள்ளது. விழுப் புரம், திண்டிவனம் போன்ற பகுதிகளில் இருந்து தற்போது தர்பூசணி வரவழைக்கப் படுகிறது. கடந்த ஆண்டு கிலோ ரூ.15–க்கு விற்கப்பட்ட தர்பூசணி பழம் இந்த ஆண்டு கிலோ ரூ.20–க்கு விற்கப் படுகின்றன தொடர்ந்து சில வாரங்களுக்கு தர்பூசணி வரத்து அதிகரிக்கும் நிலை காணப்படுகிறது. இதேபோல் தர்பூசணி பழச்சாறு விற் பனையும் தீவிரம் அடைந்துள் ளது. பழச்சாறு ரூ.20 முதல் விற்கப்படுகிறது. இவ்வாறு வியாபாரிகள் கூறினார்.

**கத்தரி விளைச்சல் அமோகம் விலை குறைவால் விவசாயிகள் கவலை**



விருத்தாசலம் பகுதிகளில் கத்தரி விளைச்சல் அமோகமாக காணப்படுகிறது. ஆனால் போதிய விலை இல்லாத காரணத்தால் கத்தரி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>கத்தரி விளைச்சல் அமோகம்</u>

விருத்தாசலம் அருகே சின்னவடவாடி, பெரியவடவாடி, தொட்டிக்குப்பம், வீராரெட்டிக்குப்பம், கோபுராபுரம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் விவசாயிகள் அதிக அளவில் கத்தரி பயிர் செய்துள்ளனர். தற்போது அவை நன்கு விளைந்து விளைச்சலை கொடுத்து வருவதால், கத்தரிக்காய் அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் விளைச்சல் அமோகமாக இருந்தும் கத்தரிக்காயின் விலை மிகவும் குறைந்து காணப்படுவதால் விவசாயிகள் பெரும் கவலை அடைந்து வருகின்றனர்.

இது குறித்து விவசாயி ஒருவர் கூறியதாவது:–

<u>விலை குறைவு</u>

விவசாயிகளான நாங்கள் மிகுந்த சிரமப்பட்டு கத்தரியை பயிர் செய்து பராமரித்து வருகிறோம். பயிர்கள் நல்ல முறையில் விளைச்சலை கொடுத்ததால் நடப்பாண்டில் விவசாயிகள் அனைவருக்கும் நல்ல வருமானம் கிடைக்கும் என நினைத்திருந்தோம்.

ஆனால் நாங்கள் எதிர்பார்த்ததை விட கத்தரிக்காய் குறைந்த விலைக்கு விற்கப்பட்டு வருவதால் எங்களுக்கு தற்போது பெரும் நஷ்டம் ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

ஒரு கிலோ கத்தரிக்காய் ரூ.4–க்கு விற்கப்படுகிறது. இது எங்களுக்கு போதுமான விலை கிடையாது.

கத்தரிக்கான பராமரிப்பு செலவு அதிகரித்துள்ளதால் அவை 1 கிலோவுக்கு ரூ.10–க்கு விற்றால் மட்டுமே சிறிதளவு வருமானம் கிடைக்கும்.

அப்படி விற்கவில்லை என்றால் பெரும் நஷ்டம் ஏற்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**சங்கராபுரம் பகுதிகளில் வசம்பு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்**



சங்கராபுரம் அருகே உள்ள காட்டுவன்னஞ்சூரில் விவசாயி ஒருவர் தனது நிலத்தில் வசம்பு பயிரிட்டுள்ளதை படத்தில் காணலாம்

சங்கராபுரம் பகுதிகளில் விவசாயிகள் வசம்பு பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

வசம்பு

தமிழில் வசம்பு மற்றும் பிள்ளை வளர்த்தி என அழைக்கப்படும் மருத்துவ குணம் நிறைந்த வசம்பு பயிரை சங்கராபுரம், காட்டு வன்னஞ்சூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் விவசாயிகள் ஆர்வமுடன் பயிரிட்டு வருகின்றனர். 8 மாதத்திலிருந்து 10 மாத பயிரான இப்பயிர் பதிய முறையில் பிரித்து 1½ அடி இடைவெளியில் நடவு செய்வர். நெற்பயிருக்கு தண்ணீர் தேக்கி வைப்பது போல் இவற்றிற்கும் தண்ணீர் தேக்கி வைக்கவேண்டும். கிழங்குகள் வயலில் படரும், நன்கு விளைந்தவுடன் தண் ணீரை நிறுத்திவிட்டு ஏறு உழுது கிழங்கினை பிரித்து எடுத்து வெயிலில் காய வைத்து விற்கப்படுகிறது. பெரும் பாலும் வசம்பு ஒப்பந்த முறையில் சாகுபடி செய்யப் படுகிறது. கர்நாடக மாநிலம் சிம்கூர், தமிழகத்தில் மதுரை மாவட்டம் பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் வயல்வெளி களுக்கு வந்து நேரிடையாகவே விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்து செல் கின்றனர். மருத்துவ குணம் வாய்ந்த வசம்பு சரும நோய்களுக்கு மருந்தாகவும், பல்பொடி, இயற்கை வேளாண் விவசாயத்திற்கு பூச்சிகொல்லி மருந்தாகவும் பயன் படுத்தப்படுகின்றது. 1 ஏக்கருக்கு 30 குவிண்டால் அளவு மகசூல் கிடைக் கின்றது. 1 கிலோ ரூ.110க்கு விற்கப்படுகின்றது.

**பீன்ஸ் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம்**



கல்வராயன்மலை மட்டப்பட்டு கிராமத்தில் விவசாயி ஒருவர் பீன்ஸ் சாகுபடி செய்திருப்பதை படத்தில் காணலாம்.

**கச்சிராயப்பாளையம்,**

கல்வராயன்மலையில் பீன்ஸ் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

<u>தோட்ட பயிர்</u>

விழுப்புரம் மாவட்டத்தின் சுற்றுலா தலமாக கல்வராயன் மலை உள்ளது. இங்கு விவசாயம் முக்கிய தொழிலாக நடைபெறுகிறது. மரவள்ளி கிழங்கு, திணை, வரகு ஆகியவை காலம் காலமாக பயிர் செய்து வந்த நிலையில் தற்போது காய்கறி சாகுபடிக்கு விவசாயிகள் மாறியுள்ளனர்.

மலைக்கிராம விவசாயி களிடம் ஏற்பட்டுள்ள விழிப் புணர்வை தொடர்ந்து கல்வராயன்மலையில் நிலவும் சீதோஷண நிலைக்கு ஏற்ப வெள்ளரி, முட்டை கோஸ் ஆகியவை பயிர் செய்யப் படுகிறது. இதற்கு அடுத்த படியாக பீன்ஸ் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

<u>பீன்ஸ் சாகுபடி</u>

கல்வராயன்மலையில் மட்டப்பட்டு, மணியார் பாளையம், ஆரம்பூண்டி, வாரம், கொட்டப்புத்தூர் ஆகிய கிராமங்களில் பீன்ஸ் பல ஏக்கரில் சாகுபடி செய் யப்படுகிறது. 3 மாத செடியான இதற்கு, மாசி மாதம் விதை ஊன்றப்படுகிறது. பின்னர் வாரத்துக்கு 3 நாட்கள் தண்ணீர் பாய்ச்சினால் போதும். விதை ஊன்றிய 20-வது நாளில் செடி வளர்ந்து, காய் காய்க்க தொடங்குகிறது. அது முதல் 3 மாதம் வரை பீன்ஸ் உற்பத்தியாகிறது. இதை 2 நாட்களுக்கு ஒருமுறை பறித்து

கள்ளக்குறிச்சி, சின்னசேலம், சங்கராபுரம், கருமந்துறை ஆகிய காய்கறி மார்க்கெட்டுகளில் விற்பனை செய்யப்படுகிறது. அன்றைய மார்க்கெட் நிலவரப்படி ஒரு கிலோ ரூ.10 முதல் 15 வரை விற்பனையாகிறது.

அதிக வருமானம்

30 சென்ட் பரப்பில் பீன்ஸ் சாகுபடி செய்ய வேலையாட்கள் கூலி, வாகன செலவு, உர செலவு என மொத்தம் ரூ.4 ஆயிரம் செல வாகிறது. ஆனால் ஒரு டன் வரை பீன்ஸ் உற்பத்தியாகிறது. இதன் மூலம் ரூ.10 ஆயிரம் வரை வருமானம் கிடைப்பதாக மலைவாழ் விவசாயிகள் கூறுகின்றனர். குறைந்த செலவில் அதிக வருமானம் கிடைப்பதால் பீன்சை மலைவாழ் விவசாயி கள் அதிகளவில் ஆர்வமுடன் சாகுபடி செய்கின்றனர்.

**விதைகளை பரிசோதனை செய்ய அதிகாரி யோசனை**

**நெல்லை,**

விவசாயிகள் விதைகளை பரிசோதனை செய்ய அதிகாரி வேண்டுகோள் விடுத்து உள்ளார். இதுகுறித்து நெல்லை விதை பரிசோதனை அலுவலர் முகம்மது காசிம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறிஇருப்பதாவது:-

விதை பரிசோதனை

நெல்லை விதைப்பரிசோதனை ஆய்வகத்தில் விதைகளில் பிறரக விதைகள் கலந்து உள்ளதா என்பதை மைக்ரோஸ்கோப் மூலம் கண்காணித்து ரகத்தின் குணநலன்களை கருத்தில் கொண்டு பிரித்து எடுக்கப்படுகிறது. உதாரணமாக சான்று நெல் விதையில் பிறரக விதைகள் அதாவது 2 ஆயிரம் விதைகளில் 4 விதைகள் மட்டுமே அதாவது 0.2 சதவீதம் இருக்கலாம். ஆதார விதைகளில் 2 ஆயிரம் விதைகளுக்கு ஒரு விதை அதாவது 0.05 சதவீதம் மட்டுமே அதிகபட்சமாக இருக்கலாம். வல்லுநர் விதைகளில் ஒரு விதைக்கூட கலப்பு விதைகள் இருக்கக்கூடாது. நெல் பயிராக, ஆதார நிலையாக இருந்தால் 0.05 சதவீதமும், சான்று நிலையாக இருந்தால் 0.02 சதவீதமும் இருக்க வேண்டும்.